# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 14,725/1—1966 දෙසැම්බර් 9 වැනි සිකුරාදා—1966.12.9

14,725/1 ம் இலக்கம்—1966 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 9 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### பதியப்பட்ட பங்குத் தொகுதிப், பிணைகள் கட்டளைச் சட்டம்

(420 அத்தியாயமான) பதியப்பட்ட பங்குத் தொகுதி, பிணைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பண்பால் நிதி அமைச்சர் உக்கு பண்டா வன்னிநாயக்க ஆகிய நான் 1966 ம் ஆண்டின் 22 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தினால் கடனாகப் பெறுதற்கு வேண்டிய அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள தொகையாகிய தொண்ணூற்றொரு கோடி ரூபாவில் இதற்கான அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள தொகை, அவ்வட்டவணையிற் குறிப்பிடப்பட்டுள்ள விதமாகவும், அதிற் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள் நிபந்தனைகட்கேற்பவும் இலங்கையில் கடனாகப் பெறப்படுதல் வேண்டும் என இக்கட்டளையினால் பணிக்கின்றேன்.

கொழும்பு,
1966 ஆம் ஆண்டு டிசெம்பர் 7 ந் திகதி.

யு. பீ. வன்னிநாயக,
நிதியமைச்சர்.

#### அட்டவணை

1. பெறப்பட வேண்டிய கடன் தொகை இரண்டு கோடியே ஐம்பது இலட்சம் ரூபாவாகவும் முகப்பு மதிப்பில் வழங்கப்படும் 21/25 ஆண்டுக் கடனாகவும் அமைதல் வேண்டும்.

2. குறிப்பிடப்பட்ட கடனானது பதியப்பட்ட பங்குத் தொகுதியை ஆக்கி, வழங்குதலினால் பெறப்படல் வேண்டும்.

3. கடன்மீது வழங்கப்படும் வட்டியின் வீதம் ஆண்டொன்றுக்கு 4½ சதவீதமாகவே இருத்தல் வேண்டும்.

4. ஒவ்வோர் ஆண்டிலும் யூன் மாதத்தின் 16ஆம் நாளும் டிசெம்பர் மாதத்தின் 16ஆம் நாளும் கடன்மீதான அரையாண்டு வட்டி வழங்கப்படவேண்டிய தேதிகளாக இருத்தல் வேண்டும்.

5. கடனை மீட்கும் நோக்கத்தோடு நிறுவப்படவிருக்கும் கடனிறு நிதிக்கு உதவு தொகையாக, இலங்கையின் திரட்டுநிதியில் இருந்து ஆண்டொன்றுக்கு 3 சத வீதப்படி ஓர் அரையாண்டு ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும். அத்தகைய உதவு தொகை 1967 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 16ஆம் நாளில் தொடக்கப்படுதல் வேண்டும்.

6. கடன்பெறும் நோக்கத்திற்காக வழங்கப்படும் பதியப்பட்ட பங்குத் தொகுதிகளை மீட்டற்கான தேதி 1991 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 16ஆம் நாளாகும்.

ஆயின், எப்படியிருப்பினும் 1987 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 15ஆம் திகதிக்குப் பின்னராகவும், அமைச்சர் நிச்சயிக்கும் தேதிக்கு ஆறுமாதங்கள் முன்னர் 'கசெற்றில்' வெளியிடப்படும் அறிவித்தலின் மூலம் அமைச்சரால் நியமிக்கப்படக்கூடிய ஒரு தேதியாகவுமுள்ள அத்தகைய ஒரு பிந்திய தேதியில், எவையேனும் முகப்பு மதிப்பில் பங்குத் தொகுதிகளை மீட்பதற்கு அரசாங்கத்திற்கு விருப்புரிமையிருத்தல் வேண்டும்.

#### தகவற்றொகுப்பறிக்கை

**1966 டிசெம்பர் 16 ம் தேதியன்று இப்பட்டியல் திறக்கப்பட்டு 1967 ஜனவரி 16 ம் தேதியிலோ கடன் முழுவதும் பெறப்படின் அதற்கு முன்னரோ மூடப்படும்**
**ரூ. 2,50,00,000 ஆகிய**

### இலங்கை அரசாங்க 4½ சதவீத வட்டிக்கடன் வழங்கல் 1987–91 'ஒ' தொடர் வழங்கல் முகப்பு மதிப்பின்படி வழங்கப்பட்டது.

முகப்பு மதிப்பின்படி திருப்பிக் கொடுபட வேண்டியது.

இலங்கை மத்திய வங்கி, இலங்கை அரசாங்கத்தின் சார்பாக 4½ சதவீத வட்டியுடன் கூடியதான 2,50,00,000 ரூபாய்களைக் கொண்ட ஒரு கடனுக்காக விண்ணப்பங்கள் கோருகின்றது. இக்கடன் 1991 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 16 ம் தேதியில் முகப்பு மதிப்பின்படி திருப்பிக் கொடுபடக் கூடியதாயிருக்கும். எனினும், இலங்கை அரசாங்கமானது விரும்பின், 6 மாதகால முன்னறிவித்தலில் 1987 டிசெம்பர் 15 இற்குப் பிற்பாடு, எந்நாளிலும் இக்கடனைத் திருப்பிக் கொடுக்க விருப்புரிமைகொண்டதாயிருக்கும்.

அதிகாரம்:—1966 ம் ஆண்டின் 22ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் அதிகாரத்தினும் (420 ஆம் அத்தியாயமான) பதிவு செய்யப்பட்ட பங்குத் தொகுதிகள் பிணைகள் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கவும் இக்கடன் திரட்டப்படுகிறது.

நோக்கம் :—இலங்கை அரசாங்கத்தின் 1966–67 நிதியாண்டிற்கான சேவையினது செலவைச் சமாளிப்பதற்காக 1966 ம் ஆண்டின் 22ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 2 (1) (ஆ) என்னும் பிரிவின் கீழ் இக்கடன் திரட்டப்படுகின்றது.

**வெளியீட்டு வடிவம்.**—பதிவு செய்யப்பட்ட பங்குத் தொகுதிகளாக இக்கடன் வழங்கப்படும். (பதிவு செய்த பங்குத் தொகுதிக் கேற்புடையனவான பொது நிபந்தனைகளைக் கொண்டுள்ள துண்டுத் தாள்களை இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படு கடன் திணைக்களத்திற்கு விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

**வழங்கும் விலை :** வெளியீட்டு விலை ரூ. 100 சதவீதம் விண்ணப்பகாலத்தின் போது முழுமையாகக் கொடுக்கப்பட வேண்டும். ஆகக் குறைந்த இருப்பு ரூ. 100 ஆகும்.

**விண்ணப்பங்கள்.**—1966 திசெம்பர் 16 ஆம் தேதிமுதல், பட்டியல் மூடப்படும் வரை பொதுப்படுகடன் பதிவாளரால் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். விண்ணப்பங்கள் அதற்கான படிவத்தில் எழுதப்பட்டு முழு அனுப்பு தொகையுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும். இலங்கை சேமிப்பு வங்கியினதும், அஞ்சலகச் சேமிப்பு வங்கியினதும் வைப்பாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை இந்நிலையங்களுடன் ஒழுங்கு செய்து அனுப்பி வைக்கலாம்.

வங்கியாளர்களுக்கும் (இலங்கை சேமிப்பு வங்கியும் அஞ்சலகச் சேமிப்பு வங்கியும் உட்படும்), அங்கீகாரம் பெற்ற பங்குத் தொகுதித் தரகர்களுக்கும், ஏனைய தரகர்களுக்கும், அவர்கள் முத்திரை தாங்கிய விண்ணப்பங்கள் தொடர்பாக ஏற்றுக் கொள்ளப்பட்ட உதவு தொகையினது பெயரளவுத் தொகை மீது 1/16 சதவீத தரகு வழங்கப்படும். ஏற்றுக் கொள்ளப்பட்ட உதவு தொகையின் மீது இதே சதவீதத்தைக் கொண்ட ஒரு பேரப்பேச்சுக் கூலி வழக்கறிஞர்க்கு அவர்களின் முத்திரை தாங்கப்பெற்ற விண்ணப்பங்கள் தொடர்பாக வழங்கப்படும்.

**பங்குத் தொகுதிக்கான கொடுப்பனவு**—இலங்கை மத்திய வங்கியின் பேரில் எழுதப்பெற்று " இலங்கை அரசாங்கக் கடன் கணக்கில் " என்று குறுக்கே கோடிடப்பெற்ற காசோலை மூலம் கொடுப்பனவு செய்தல் வேண்டும்.

**பங்குத்தொகுதிச் சான்றிதழ்.**—விண்ணப்பங்கள் பெறப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டபின் பங்குத் தொகுதிச் சான்றிதழ் வழங்கப்படும்.

**வட்டி.**—ஒவ்வோர் ஆண்டிலும் அரையாண்டிற்கொரு முறையாக யூன் மாதம் 16 ம் நாளிலும் திசெம்பர் மாதம் 16 ம் நாளிலும் ஆண்டொன்றுக்கு 4½ சதவீத வீதம் வட்டி கொடுபடும். முதலாவது வட்டி 1967 யூன் மாதம் 16 ம் நாளில் கொடுபடும். இவ்வட்டி, விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்ட நாள் தொடக்கம் 1967 யூன் 15 ஆம் நாளையும் உள்ளடக்கிய காலப்பகுதிக்கு உரியதாகும்.

**வரி விதிப்பு.**—(i) முத்திரைத் தீர்வை—கடன் வழங்கல் மாற்றல் அல்லது மீட்பு ஆகியவற்றிற்குப் பயன்படுத்தப்படும் ஆவணங்கள் அனைத்தும் முத்திரைதீர்வையினின்று விலக்களிக்கப்படும்.

(ii) **வருமானவரி.**—பாகப்பிரிவினையுறாத இந்துக் குடும்பங்களின் உறுப்பினர்கள் தவிர்ந்த, ஏனைய இலங்கையில் வசிக்கும் பங்குத் தொகுதியுடையார்க்கான வட்டி, வருமானவரிக்கழிப்பெதுவுமின்றி வழங்கப்படும். எனினும் வருமானவரி செலுத்தக் கடப்பாடுடையவரான இலங்கையில் வசிக்கும் பங்குத் தொகுதியுடையார்கள், அத்தகைய வட்டியைத் தமது வருமானவரித் திரட்டில் குறிப்பிடல் வேண்டும். இலங்கையில் வசிக்காதவர்களும் பாகப்பிரிவினையுறாத இந்துக்குடும்பங்களின் உறுப்பினர்களுமானவர்களின் வட்டியிலிருந்து கொடுபட வேண்டிய வரி வருவாய்க்களனிலேயே கழிக்கப்படுதல் வேண்டும். (நடைமுறையிலுள்ள வருமான வரி விகிதம்.—இலங்கையில் வசியாத தனியாட்களின் விடயத்தில் 33 1/3 சதவீதமும், பாகப்பிரிவினையுறாத இந்துக்குடும்பங்களின் விடயத்தில் 39 1/3 சதவீதமும், இலங்கையில் வதியாத கம்பனிகளுக்குச் செலுத்தப்படும் அல்லது அவற்றில் வரவில் வைக்கப்படும் வட்டியின் விடயத்தில் 67 சதவீதமும் ஆகும்) இலங்கை வருமானவரியிலிருந்து விலக்கப்பெற்ற ஆட்கள், அவர்களிடமிருந்து கழிக்கப் பெற்ற வரியைத் திருப்பித்தரும்படி கோர உரிமையுடையர்.

(iii) **சேமிப்பு நிவாரணம்.**—(1965 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க உண்ணுட்டரசிறைத் (திருத்தச்) சட்டத்தின்) 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உண்ணுட்டரசிறைச் சட்டத்தின் 69 " அ " பிரிவின் கீழ் இலங்கை அரசாங்கப் பிணைகளில் தனியாட்களால் செய்யப்பட்ட முதலீடுகள், அங்கீகரிக்கப்பட்ட சேமிப்புகள் எனக் கொள்ளப்பட்டு சேமிப்பு நிவாரணத்திற்குத் தகுந்தவையாக இருக்கும்.

(iv) **செல்வ வரி.**—1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உண்ணுட்டரசிறைச் சட்டத்தின் 31 (1) (எ) என்னும் பிரிவின் கீழ் இலங்கை அரசாங்கப் பிணைகளில் இட்ட முதலீடுகள் ஒருவரின செல்வத்திலிருந்து தவிர்க்கப்படும். எனவே இவை செல்வ வரியினின்றும் விலக்குப் பெறுகின்றன.

(v) **சொத்துவரி.**—அரசாங்கமானது இலங்கையிலே வழங்கப்படும் இலங்கை அரசாங்கப் பங்குத் தொகுதிகளைச் சொத்துவரிக் கொடுப்பனவின் பேரில் ஏற்றுக் கொள்கிறது. முகப்பு மதிப்பில் வழங்கப்பட்டதும் அம்மதிப்பில் திருப்பிக் கொடுபடக்கூடியதுமான கொடுப்பனவு பற்றிய பங்குத் தொகுதியைப் பொறுத்தமட்டில் அதன் மொத்தப் பெறுமானமும் அதன்வட்டியும் சேர்ந்த தொகைக்குச் சமமான சொத்து வரித் தொகையொன்றினை அது சமன் செய்யும். கொடுப்பனவு முற்றாக அல்லது முகப்பு மதிப்பிற்குக் குறைவாக வழங்கப்பட்ட அல்லது முகப்பு மதிப்பு விலை அல்லாத வேறொரு விலையில் திருப்பிக் கொடுபட வேண்டிய பங்குத் தொகுதியைப் பொறுத்த மட்டில் பெயரளவான நூறு ரூபாய்ப் பங்குத் தொகுதிக்கும் அதனில் சேர்ந்த வட்டிக்குமாகச் சமன் செய்து கொள்ளக்கூடிய சொத்து வரித் தொகைபற்றி அரசாங்கக் கசெற்றில் காலத்துக்குக்காலம் அறிவிக்கப்படும். ஆயின், பெயரளவில் நூறு ரூபாய்ப் பங்குத் தொகுதிக்காகச் சமன்செய்து கொள்ளக்கூடிய தொகை முதலில் உதவு தொகையாகப் பெற்ற தொகைக்கோ, அல்லது முதிர்ச்சியின் போது திருப்பிக் கொடுபட வேண்டிய தொகைக்கோ, எது குறைவாக உள்ளதோ அதற்கு குறையாமல் இருக்கும். சொத்து வரிக் கொடுப்பனவுக்கான பணத்திற்கு பதிலாக எப்பங்குத் தொகுதியினையும் ஏற்றுக்கொள்வது, பின்வரும் இரண்டினில் ஒன்றை நிபந்தனையாகக் கொண்டுள்ளது.

(அ) முதலில் வழங்கப்பட்ட போது இறந்தவரால் உதவு தொகையாகக் கொடுக்கப்பட்டிருத்தல் வேண்டும். அல்லது

(ஆ) இறந்தவரால், அவர் இறந்த தேதிக்கு ஒரு ஆண்டிற்கு முன்னரே கொள்வனவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிணை.**—இக்கடனுக்கு இலங்கைத் திரட்டுநிதி பிணையாக அமைந்துள்ளது. இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினது முகாமையின் கீழ், கடனை மீட்கும் நோக்கத்திற்கெனத் தனியே ஒரு கடனுழ்நிதி நிறுவப்படும். இச்சபையே கடனுழ்நிதிகளின் நம்பிக்கைப் பொறுப்பாளராதல் வேண்டும். ஆண்டொன்றுக்கு 3 சதவீதம் அரையாண்டிற்கொரு முறை உதவு தொகை உதவுதல் 1967 திசெம்பர் 16 ஆம் தேதியிலிருந்து தொடங்கப் பெறும்.

**பொதுப்படுகடன்.**—நிதியாக்கப்பட்டுள்ள இலங்கையின் இப்போதைய மொத்தப் பொதுப்படுகடன் ரூ. 306,21,42,793 ஆகும். ஒன்று சேர்ந்த கடனுழ்நிதிகளின் அண்ணளவான சந்தைப் பெறுமானம் ரூ. 48,20,07,196 ஆகும். ஆகவே, நிதியாக்கப்பட்ட தேறிய பொதுப்படுகடன் ரூ. 258,01,35,597 ஆகும்.

**விண்ணப்பப் படிவங்கள்.**—விண்ணப்பப்படிவங்களைப் பொதுப்படுகடன் திணைக்களத்தில், அல்லது ஏதேனும் வர்த்தக வங்கி, கச்சேரி, அஞ்சலகத்தில் அல்லது தேசிய சேமிப்பு இயக்க ஆணையாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பொதுப்படுகடன் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி,
த. பெ. 1149,
கொழும்பு, 1966, டிசெம்பர் 9 ந் திகதி

**ஓ. பீ. குணவர்தன,**
பொதுப்படுகடன் பதிவாளர்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.